**நாள் :** 20 April, 2014

# பிரசார குறிப்புகள் – 20/04/2014

**அருண் ஜெட்லி**

*(எதிர்க்கட்சி தலைவர், மாநிலங்களவை)*

லோக் பால் நியமன சர்ச்சை முடிவுக்கு வருவதாக தெரியவில்லை. லோக் பால் சட்டத்தின் கீழ் ஐமுகூ அரசு விதிகளை கட்டமைத்துள்ளது. இயற்றப்பட்டுள்ள விதிகள் சட்டத்திற்கு மாறாகவே இருக்கின்றன. இது ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தில் வழக்கில் இருக்கும் சவாலான விஷயம்.

தேர்தல் அறிவிப்புகள் வெளியான உடனேயே, ஐமுகூ அரசு லோக் பால் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்கும் பணியில் மும்முரமாக செயல்பட முடிவெடுத்தது. தேடுதல் குழுவும் அவசர அவசரமாக நியமிக்கப்பட்டது. பணியாளர்கள் துறை தேடுதல் குழுவின் அதிகாரத்தைப் பறித்துக்கொண்டு, நியமிக்கப்பட வேண்டிய நபர்களின் பட்டியலை தயார் செய்தது. இப்படிப்பட்ட செயல்முறையால் தேடுதல் குழுவின் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த உறுப்பினர்கள் உட்பட அனைவரும் சங்கடத்துள்ளானார்கள். இதன் காரணமாக ஃபாலி எஸ். நாரிமன் மற்றும் நீதிபதி கே.டி. தாமஸ் ஆகிய இரு தலைமை உறுப்பினர்களும் தேடுதல் குழுவிலிருந்து ராஜினாமா செய்தனர்.

இன்று, தேவையான உறுப்பினர்களைக் கொண்ட தேடுதல் குழு இல்லை. தேடுதல் குழு நியமிக்கப்பட்ட பிறகு, நியமனத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களின் பெயர்களையும் தீர ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதன் பின், தேடுதல் குழுவால் ஒப்புதல் தரப்பட்டு, பிறகு அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட வேண்டும்.

நாட்டில் பொது தேர்தல் பாதியளவு நிறைவு பெற்று விட்டது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு புதிய அரசு அமைக்கப்படுவதற்கு இன்னும் 26 நாட்களே உள்ளன. ஐமுகூ அரசு முடிவுக்கு வரும் இவ்வேளையில், லோக் பால் நியமனத்தில் இவ்வளவு அவசரம் காட்டுவது முறையான செயலா? நிச்சயமாக இல்லை.

இந்நிலையில் ஐமுகூ அரசு அதன் நியமன செயல்படுகளில் மும்முரம் காட்டினால், அது மொத்த அரசியல் முறைகேடாகவும், நடத்தை விதி மீறலாகவும்தான் இருக்கும். இதற்கிடையில், அதன் செயல் முறைகளும் சட்ட ரீதியிலான சந்தேகத்திற்குள்ளாகிறது. இது போன்ற முறைகேடான அவசர நிலைகள் லோக் பால் மீதான நம்பகத்தன்மையை அது இயற்றப்படுவதற்கு முன்பே அழித்து விடும். அதனால் இத்தகைய நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தேடுதல் குழுவின் காலியிடங்கள் நிரப்பப்படுவதற்காக பிரதமர் அலுவலகம் திட்டமிடும் தேர்வு குழுவின் கூட்டம் வெற்றி பெற அனுமதிக்க கூடாது.

ஒய்வு பெற்ற நிலையிலுள்ள டாக்டர் மன்மோகன் சிங், அரசு முடிவுக்கு வரும் இந்நேரத்தில் லோக் பால் நியமனத்தில் மும்முரம் காட்டினால், கட்சி தலைமையில் இருந்து அமைப்புகளைச் சீர்குலைத்த பிரதமர் என்றே நினைவு கூரப்படுவார் என்பதை அவர் தீர சிந்திக்க வேண்டும். அப்படியும் அவர் இது போன்ற அவசர நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும், அதில் அவர் வெற்றியடைய அனுமதிக்காமல் இருக்க தேவையான வலிமையை மொத்த இந்திய ஜனநாயக அமைப்பும்

பெற்றிருக்கிறது. சில விதிவிலக்கான பொறுப்புணர்வுகளைத் தவிர பிரதமருக்கு இழப்பதற்கு வேறு ஒன்றும் இல்லை.

✵✵✵✵✵